கெஸ்பாவ நகர சபை - 2024
----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெஸ்பாவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அதிகாரம்) 181(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கெஸ்பாவ நகர சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2025 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது பாதீடு செய்யப்பட தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்படும்.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 2 அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நிதிக்கூற்றுக்கள் பயனர்களுக்கு பயன்படும் வகையில் தயாரிக்க லேண்டியிருந்த போதிலும் சபையினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 16 இல் மீளாய்வாண்டில் இயந்திரங்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், கட்டிடங்கள் மற்றும் பொருத்திகள் ஒன்று சேர்ப்பதன் கீழ் சரியான பெறுமதி காண்பிக்கப் பட்டிருக்கவில்லை.	நாட்குறிப்புக்களின் மூலம் இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள் கணக்குகளிலும் பட்டோலைகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் இணக்கம் செய்யப்படும்.	நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கட்டிடங்களின் சேர்த்தல்கள் விடயத்திற்குரிய மீதி அதற்குரிய பட்டோலைகளுடன் இணக்கம் செய்யும் போது ரூபா 1,984,236 வேறுபாடு காணப்பட்டது.	பட்டோலைகள் மற்றும் மீதி அறிக்கைகளுக்கு இடையிலான வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது.	இணக்கம் இன்மைகளை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2006 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 281,047 நிலுவை வினோத வரிகளுக்கு உரிய காலப் பகுப்பாய்வு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாது இருந்தமையால் அந்த மீதிகளைத் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாது இருந்ததுடன் அந்த தொகை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேல் மாகாண ஆளுநரால் இந்த தொகையை பதிவளிப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.	கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரியாக சீராக்கப்படல் வேண்டும்.

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 1653	சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களின் மைலோ மீற்றர் செயலிழந்த போதிலும் பழுது பார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	பதிலளிக்கப்பட வில்லை.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 2016/30 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	சபைக்குரிய 10 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	மேற்படி	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 87,706,703 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 564,836,406 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)	ரூபா(000)
i.	ஆதன வரியும் வரியும்	85,000	94,778	63,408	82,978	84,000	90,943	50,671	33,329
ii.	வாடகை	30,066	29,874	31,394	1,312	32,340	29,898	28,237	3,517
iii.	அனுமதிப்பத்திரக் கட்டணம்	1,500	1,732	1,732	-	1,550	1,625	1,625	-
iv	ஏனைய வருமானம்	4,000	4,266	4,266	-	260,000	378,627	378,657	-
	மொத்தம்	120,566	130,650	100,800	84,290	377,890	501,093	459,190	36,846

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனவரியும் வரியும் ஆதனவரி மற்றும் வரி அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையால் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 82,977,422 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 50,000 ஐ விஞ்சிய ஆதனவரி அலகுகள் 54 இல் இருந்து அறவிட வேண்டிய நிலுவை மீதி ரூபா 5,400,025 ஆகும்.	நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1946 இன் 30 ஆம் இலக்க வாடகை மற்றும் மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் 20 ஆம்	2018 ஆம் ஆண்டின் போது இறுதித் தடவையாக ஆதனங்கள் மதிப்பீடு	ஆதனவரிக்காக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

	பிரிவின் பிரகாரம் ஆதனவரி 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2012/2013 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட ஆதனவரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.	செய்யப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்ப கட்டத்தில் காணப்படுகின்றது.	
(இ)	ஆரம்ப மீதி சரியாக உறுதிப்படுத்துவதற்கு முடியாது இருந்த 2024 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 2,542,643 ஆன கழிவுப் பொருள் வரி நிலுவை ரூபா 1,153,393 இற்கு சமமான 45 சதவீதத் தொகை 2024 ஆம் ஆண்டின் போதும் அறவிடப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மொத்த கழிவுப் பொருள் வரி பெறுமதி ரூபா 2,307,893 ஆக இருந்ததுடன் சபையினால் அதனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 சனவரி 01 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட்ட மீதி 2018 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையான நிலுவை மீதியாக இருந்ததுடன் தற்போது இந்த நிலுவை மீதியை சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.	நிலுவை கழிவுப் பொருள் வரியை அறவிடுவதற்கு நடவக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சபைக்குரிய 336 கடைகளில் 170 கடைகளுக்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கவில்லை.	2025 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையில் 261 கடைகள் உடன்படிக்கையை புதுப்பித்துள்ளதுடன் 75 கடைகள் மாத்திரம் உடன்படிக்கை புதுப்பிக்க வேண்டியிருந்தது.	நிலுவைக் கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 76 கடைகளில் இருந்து ரூபா 1,311,910 அறவிட வேண்டி இருந்தது.	2024 ஏப்ரல் 29 ஆந்திகதி வரையில் ரூபா 861,910 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பணத்தை அறவிடுதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	வருடாந்த கேள்வி கோரலின் அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனத் தரிப்பிடத்தின் ஆதனங்களுக்கு உரிய மொத்த நிலுவை ரூபா 206,260 அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	வாகனத் தரிப்பிடங்களுக்கு உரிய அங்கீகாரம் கிடைத்த பின்னர் மீதி நடவடிக்கைகளை மேற்கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும்.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2024 ஆம் ஆண்டின் போது நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற அறிவித்தல்	பணம் செலுத்தாத அறிவித்தல் பதாதைகள் 19 இன் காட்சி நிரலை	அறிவித்தல் பதாதை தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு தரவு

	பதாதைகளுக்கு இடையே உரிமையாளர்களால் அறிவித்தல் வழங்கிய 178 அறிவித்தல் பதாதைகளுக்காக மாத்திரம் ரூபா 2,978,450 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அறிவித்தல் பதாதை தொடர்பாக ஆய்வு ஒன்றின் மூலம் தகவல்களை சேகரித்து தகவல் முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை.	அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அறிவித்தல் பதாதை கட்டணப் பதிவேட்டை முறையாக ஆய்வு செய்வதன் மூலம் நாளது வரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	முறைமையினைத் தயாரித்து அதன் பிரகாரம்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	பதிவேடுகளுக்கு கொண்டு வரப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை 41 இற்காக சிட்டையிடப்பட்ட கட்டணம் ரூபா 710,472 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 463,762 வருமானத்தை அறவிடுவதற்கு முடியாது இருந்தது.	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு முடியாது இருந்த ரூபா 463,762 மீதியில் முன்னைய ஆண்டின் நிலுவையும் உள்ளடங்குவதுடன் அதில் ரூபா 242,026 தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	2017 ஆம் அண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 191,823 ஆன முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிலுவை முத்திரைக் கட்டணம் தொடர்பாக மீதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2007 ஆம் ஆண்டு முதல் தனியார் கம்பனியில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 169,203 முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு சபை தவறியிருந்தது.	12 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய இந்த கோவையை கண்டறிய முடியாது இருந்தமையால் ஒப்பந்தகாரர் தொடர்பான எந்த ஒரு தகவலையும் கண்டறிய முடியாதுள்ளது.	கோவைகளைக் கண்டறிந்து பெற வேண்டிய பணத்தை தாமதம் இன்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,115,571 மாகாண சபைக் கடன் கொடுத்தோர் மீதியில் 2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,394,254 மீதியும் உள்ளடக்கி இருந்த போதும் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த நிலுவை மீதியில் ரூபா 185,154 பெறுமதி தற்போது தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.	செலுத்த வேண்டிய கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2021 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை கேள்வி பிணை	ரூபா 115,850 கூட்டுத்தொகையான 05 மீதிகளை எதிர்காலத்தில்	காலாவதியான வைப்புக்களை ஒய்வு பெறச்

	வைப்பு ரூபா 2,545,050 தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை.	தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	05 மயான நிலங்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு வேலி அல்லது பாதுகாப்பு சுவர் ஒன்றை நிர்மாணிப்பதற்கு சபை தவறியிருந்ததுடன் பாதுகாக்கப் பட்ட மதில் இல்லாமையினால் மயான நிலத்திற்குச் சொந்தமான காணியில் அனுமதியற்ற வகையில் கைப்பற்றவதற்கான ஆபத்துக் காணப்பட்டது.	நில அளவையாளர் திணைக்களத்தில் இருந்து நில வரைபடம் மேற்கொண்டு அடையாளப்படுத்தப்பட்டு சபைக்கு வழங்கப்பட்ட பின் மயான நிலங்களின் பாதுகாப்பு வேலிகள் நிர்மாணிக்கப்படும்.	மயான நிலங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மாகாண சபை அதிகார பிரதேசத்தில் காணப்படுகின்ற 14 மயான நிலங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்கவில்லை.	கெஸ்பாவ பிரதேச செயலகத்தால் 14 மயான நிலங்களை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தேவையினைக் கண்டறிந்து மற்றும் குறைபாடுகளை பூர்த்தி செய்தல் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.	மயான நிலங்களின் உரித்தை கைப்பற்றுதல் வேண்டும்.
(ஆ)	நகர அபிவிருத்தி அதிகார சபைக்காக பேணிச் செல்லப்படுகின்ற ரூபா 47,764,431 மீதியுடன் நடைமுறைக் கணக்கில் 2024 ஆம் ஆண்டின் போது எந்த ஒரு தொகையும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது.	பதிலளிக்கப்படவில்லை.	நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் ஆக்க பூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துதல் வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் வாகனம் செயலிழந்த நிலையில் காணப்பட்டதுடன் பைபர் படகு மடபாத்த கழிவுப் பொருள் தளத்தில் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	சபைக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

3.3 இலக்குகள் நிறைவேற்றப்படுவதில் தாமதம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
கிரயம் ரூபா 613,238,034 தொகையில் கெஸ்பாவ புதிய கட்டிடம் 18 மாத காலத்தில் நிர்மாணிப்பதற்காக தனியார் கம்பனி ஒன்றுடன் 2020 மார்ச் 05 ஆந் திகதி உடன்படிக்கை செய்திருந்ததுடன் பின்னர் அந்த உடன்படிக்கை 2023 பெப்ரவரி 10 ஆந் திகதி புதுப்பிக்கப்பட்டிருந்தது. புதிய உடன்படிக்கையின் படி 2023	இதற்காக விரிவான பதில் ஒன்று வழங்க வேண்டியிருந்தமையால் வேலை அத்தியகட்சரின் ஆலோசனையின் பிரகாரம் மேலும் 14 நாள் காலம் தேவையாக உள்ளது.	நிர்மாண நடவடிக்கைகளை துரிதமாக பூரத்தி செய்தல் வேண்டும்.

செப்தெம்பர் 26 ஆந் திகதியில் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் ஊழியர்களுக்கு மேலதிகமாக சபையின் செயற்திட்டத்திற்காக சேர்க்கப்பட்ட 64 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டிற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 16,232,802 சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது.	செயற்திட்டத் தேவையின் கீழ் மீள்வாண்டிற்காக 64 ஊழியர்களுக்கு ரூபா 16,232,802 சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது.	சபையின் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மாத்திரம் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியரிடம் இருந்து ரூபா 226,323 தொகையும், சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து ரூபா 61,238 தொகையும், ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணமடைந்த 07 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 922,318 தொகையும், இடம் மாற்றலாகிச் சென்ற 06 உத்தியோகத்தர்களிடம் இருந்து ரூபா 587,618 தொகையும் ஆக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 1,797,497 ஆக இருந்ததுடன் அதில் 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்படுகின்ற நிலுவை மீதி ரூபா 379,193 ஆகும்.	மரணமடைந்த சுகாதார தொழிலாளரின் ரூபா 108,580 ஆன ஊழியர் கடன் தொடர்பாக மரண பணிக் கொடையில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு உரிமையாளர்கள் முன்வராமையினால் அறவிட முடியாது இருந்ததுடன் மிகுதி கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவு மற்றும் 2019 திசெம்பர் 24 ஆந் திகதிய இலக்கம் 2155/7 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண நகர சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக விதி 08 இன் பிரகாரம் ஒவ்வொரு நிதி	பதிலளிக்கப்படவில்லை.	குறித்துரைத்த திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆண்டிற்காவும் நிதிக் கூற்றுக்களுக்கு இணையாக நிதியாண்டின் நிதிக்கூற்றுக்கள் அடுத்து வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2025 மே 09 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நகர சபையின் 2024 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் 22 மூலதன செலவின செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 424,583,700 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளபடியாக ஏற்பட்ட செலவினம் ரூபா 99,076,213 ஆகும்.	பதிலளிக்கப்படவில்லை.	பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 செலவின குறியீடுகளின் பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாடான ரூபா 10,700,000 தொகையில் ரூபா 7,006,893 பயன் படுத்தப்படாதிருந்த போதும் 29.65 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் நிதியேற்பாடு குறைவாக பயன்படுத்தப் பட்டிருந்தது.	பதிலளிக்கப்படவில்லை.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்த ஒரு செலவினமும் மேற்கொள்ளப்படாது இருந்த நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வருகின்ற பயிற்சிப் புத்தகங்களை பகிர்ந்தளித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்ப மற்றும் வறுமைக்கான சலுகை உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் சுகாதார செலவின விடயத்தின் கீழ் வருகின்ற நடமாடும் சிகிச்சை நிகழ்ச்சித் திட்டங்கள், சமூக சபைகள், விளையாட்டு அரங்கு, சுற்றாடல் நடவடிக்கைகள் மற்றும் இந்த கட்டக்காலி நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல் போன்ற 11 செலவினத் தலைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 29,000,000 ஆகும்.	பதிலளிக்கப்படவில்லை.	பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும்.